IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.168/2021

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | MURUGAVEL |
| FATHER'S NAME | : | MUNUSAMI |
| VILLAGE | : | MELPATTI |
| OCCUPATION | : | SI |
| AGE | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 6th day of March 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மேல்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2020ஆம் வருடம் மேல்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராஜமாணிக்கம் பணிபுரிந்த விவரம் எனக்கு தெரியும். காவல் நிலைய கோப்புகளை பார்வையிட்ட வகையில் அவரது கையொப்பங்கள் எனக்கு நன்கு பரிட்சியம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் மேற்படி சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 06.03.2020 அன்று காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜமாணிக்கம் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது சிஎம்சி மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற தகவலின்பேரில் ராதாகிருஷ்ணன் வயது 77 என்பவரை மருத்வமனை சென்று விசாரிக்க முயன்றபோது அவரால் பேசஇயலாத நிலையில் இருந்ததால் அவருடன் இருந்த அவரது மகன் ஜெகன்ராஜ் என்பவரை கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண். 74/2020 இதச பிரிவுகள் 279, 304(A) என முதல் தகவல் அறிக்கை பதிவு அதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை இணைத்து கணம் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை மேலதிகாரிகளின் பார்வைக்கு வைத்தும், விசாரணை நகலை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

மறுநாள் 07.03.2020 காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று விசாரணை செய்து சாட்சிகள் சரவணன் மற்றும் சரவணன் த/பெ.சேகர் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றார். 12.03.2020 அன்று மதியம் 02.30 மணிளயவில் வேலூர் அரசு மருத்துவமனை சவகிடங்கு அருகே இறந்த ராதாகிருஷ்ணன் என்பவரது பிரேத்தின் மீது பிரேதவிசாரணை செய்து பஞ்சாயத்தாரிடம் கையொப்பம் பெற்றார். பின்பு மேற்படி பிரேதத்தை தலைமை காவலர் திரு.காமராஜ் என்பவரிடம் வேண்டுகோள் கடிதம்

கொடுத்து பிரேத பரிசோதனைக்காக மருத்துவர்.ராஜேந்திரன் என்பவர் வசம் ஒப்படைத்தார்.

பின்னர் சாட்சிகள் ஜெகன்ராஜ், கிருபா, சாரதா, வளர்மதி, சரவணன் மற்றும் சரவணன் த/பெ.சேகர், ராஜமாணிக்கம், ராமு, குமார், ரவிக்குமார், பாபு ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்தார். சாட்சிகளின் விசாரணையில் இருந்து சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரியைத் தேடி வந்த நிலையில் எதிரியை கடந்த 11.03.2020 அன்று காலை 10.30 மணிக்கு எதிரியை காரணம் கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க பிணையம் பெற்று ஜாமீனில் விடுதலை செய்தார்.

பின்பு விபத்தை ஏற்படுத்திய வாகனமான TN 23 CX5603 என்ற Light goods vehicle Ashok leyland என்ற வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்காக வெங்கடராகவன் மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் ஒப்படைத்தார். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் மோட்டார்வாகன ஆய்வறிக்கை பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் வெங்கடராகவன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர். ராஜேந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரத பரிசோதனை அறிக்கை பெற்றார். மேற்படி வேண்டுகோள் கடிதம் பெற்ற காமராஜ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும் பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், மோட்டார் வாகன சான்று அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரி மீது மேலே கண்ட பிரிவுகளின் கீழ் குற்ற அறிக்கையை தாக்கல் செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் சொன்னபடி வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சொன்னபடி சொன்ன நேரத்தில் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யவில்லை என்றாலும் சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் நான் சொன்னபடி வழக்கு சொத்து கைப்பற்றப்படவில்லை என்றாலும், சொன்னபடி சொன்னவிதத்தில் எதிரி கைது செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

Sd/–R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.